பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 141 நாள்: 13.09.2018

# சென்னைப் பள்ளி மாணவர்கள் தேசிய அளவில் நடைபெற்ற Taekwon-Do போட்டியில் தங்கப்பதக்கம் வென்று சாதனை

------

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் வில்லிவாக்கம் சென்னை நடுநிலைப்பள்ளியில் 6ம் வகுப்பு பயிலும் மாணவர்கள் சு.அணில்குமார் மற்றும் க்ஷ.வினோத் ஆகியோர் கோவா–பனாஜியில் 25.08.2018 முதல் 26.08.2018 வரை தேசிய அளவில் நடைபெற்ற Taekwon-Do என்ற தற்காப்புக்கலை போட்டியில் 25–30 Kg எடைப்பிரிவில் போட்டியிட்டு தங்கப்பதக்கம் வென்று சாதனைபுரிந்துள்ளனர்.

தொடர்ந்து, 2019–ல் நடைபெறவிருக்கும் ஆசிய அளவிலான போட்டியில் கலந்துக் கொள்ளவும், இந்த மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என்பது பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறைக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளது.

வெற்றி பெற்ற மாணவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (கல்வி) (பொ) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துக்களை பெற்றனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி